விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, காந்தி மைதானத்தில் கூட்டுறவுத் துறையின் மூலம் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் ஆகியோர் நேற்று முன்தினம் (11.01.2024) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட செட்டிநாடு கால்நடைப்பண்ணையின் செயல்பாடுகள் குறித்து, ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.இரா.கார்த்திகேயன் மற்றும் செட்டிநாடு கால்நடைப்பண்ணை துணை இயக்குநர் மரு.வே.சு.ராகவன், கால்நடை உதவி மருத்துவர்கள், விவசாய மேலாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

இராமநாதபுரம் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அறிக்கை!

இராமநாதபுரம், ஜன. 13 -

தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணியின் முன்னெடுப்பில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 9.30 மணி முதல் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், "சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு" நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தொண்டர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் பயிற்சி வகுப்பில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

தென்காசி தெற்குத் - தகவல் தொழில் நுட்ப அணி சார்பில்

சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வேண்டுகோள்!

தென்காசி, ஜன.13-

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் தென்காசி சிவந்தி நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் நடைபெறுகிறது என தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:-

தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி முன்னெடுப்பில் தென்காசி தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் இன்று (13ஆம் தேதி-சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் எனது தலைமையில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளரணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி உள்ளிட்ட தலைமைக் கழகம் அறிவித்த மேற்கண்ட அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பி னர்கள் மற்றும் நிர்வாகிகள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

திண்டுக்கல்லுக்கு

பொங்கல் திருநாளை முன்னிட்டு 150 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

திண்டுக்கல், ஜன. 13-

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னையிலிருந்து திண்டுக்கல், தேனி, பழநி ஆகிய பகுதிகளுக்கு பயணிகள் செல்வதற்கு 150 சிறப்பு பேருந்துகளும் மீண்டும் சொந்த ஊரிலிருந்து சென்னை செல்வதற்கு 150 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.

மேலும் திருப்பூர் 50, கோவை 75, திருச்சி 30 மற்றும் இதர ஊர்களுக்கு 50 பேருந்துகளும் மற்றும் கூட்டத்தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

திண்டுக்கல், பழனி, திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலிருந்தும் அவற்றினைச் சார்ந்த பகுதிகளிலிருந்தும் சபரிமலைக்குச் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை முன்னிட்டு இப்போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மேற்கண்ட ஊர்களில் இருந்து குமுளிக்கு 100 சிறப்புப் பேருந்துகள் இயக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அலுவலர்கள் மற்றும் பயணச் சீட்டு ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இச்செய்தினை தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

தமிழ்ப் புத்தாண்டு - தமிழர் திருநாள் சமத்துவப் பொங்கல் விழா!

மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிக்கை!

நெல்லை, ஜன.13-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (13ஆம் தேதி சனிக்கிழமை) காலை 11 மணியளவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தமிழ் புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டக் கழகத்தில் சமத்துவப் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

இவ்விழாவில் மத நல்லிணக்கத்தை போற்றி காக்கும் வகையில் சமத்துவத்தையும்,சகோதரத்துவத்தையும்,இந்து,முஸ்லிம்,கிறிஸ்தவ பெரியோர்கள் கலந்து கொள்ளும் வகையில் கொண்டாடப்படுகின்ற இவ்விழா நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம் தலைமையிலும்,ஸ்ரீலஸ்ரீ புத்தாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் பங்கு தந்தை பேராயர்கள், சி.எஸ்.ஐ. திருச்சபையின் குறுவாணர்கள் ஆகியோர் முன்னிலையில் சமத்துவப் பொங்கல் நடைபெற உள்ளது.

மேலும் பொங்கல் திருநாளை முன்னிட்டு மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட உள்ளது. இவ்விழாவில் அனைவருக்கும் (நான்) நன்றி கூற உள்ளேன்.எனவே முன்னாள் இந்நாள் சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள்,மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில,மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர்,வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணியின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழகத் தோழர்கள், தமிழ் ஆர்வலர்கள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சமத்துவப் பொங்கலை சிறப்பித்திட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையூம் தலைமையில்

நெல்லை மாநகர தி.மு.க. பகுதிச் செயலாளர்கள் கூட்டம்!

மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கினார்!

நெல்லை, ஜன.13-

நெல்லை மாநகர தி.மு.க. பகுதி செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாநகர கழக அலுவலகத்தில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்கினார்.

இது தொடர்பாக மாநகர செயலாளர் சுப்பிர மணியன் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மாநகர தி.மு.க. அலுவலகத்தில் தி.மு.க. பகுதி செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பகுதி செயலாளர்கள் நமச்சிவாயம் (நெல்லை)அண்டன் செல்லதுரை (பாளை) தச்சை பகுதி துணைச் செயலாளர் ஸ்டார் முருகன் மாநகர பிரதிநிதி சிவசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட 4 பகுதிகளிலும் உள்ள 55 வார்டுகளிலும்,7 வாக்கு சாவடிகளுக்கு 1 நபர் வீதம் 65 நபர்கள் வாக்குச்சாவடி தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளர்கள் 421 வாக்குச்சாவடிகளுக்கு நியமிப்பதாக ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாநகர பகுதி,வட்டக் கழக நிர்வாகிகள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தேர்தல் பணி அறிந்த கழக சொந்தங்களாகவும் இருக்கலாம் என்று தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.மேலும் வாக்குச்சாவடி தேர்தல் பணி ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப் படுபவர் அவரின் வாக்குச்சாவடி எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும் என்று தலைமைக் கழகம் அறிவுறுத்திய நாட்களில் வாக்குச்சாவடி தேர்வு பணி ஒருங்கிணைப்பாளர்களை தேர்வு செய்து தேர்தல் பணி ஒருங்கிணைப் பாளருக்கான பூர்த்தி செய்த படிவங்களை இன்று (13ஆம் தேதி) மாலை 5 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

நெல்லை கிழக்கு - மேலப்பாளையம் கல்லூரியில்

பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் - கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் - மா.செல்வராஜ் பங்கேற்பு!

மேலப்பாளையம், ஜன.13-

நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்காக ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பில் கருத்தரங்கம் விழா சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் சட்டப்பேரவை முன்னாள்

தலைவரும்,குழு உறுப்பினரும், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளருமான இரா.ஆவுடையப்பன், சட்டப்பேரவை முன்னாள் செயலாளர் மா.செல்வராஜ்,மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக பல்வேறு கலை நிகழ்ச்சிகள், மருத்துவ முகாம்கள், கருத்தரங்குகள் ஆகியன மாநிலம் முழுவதும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் தேர்வு செய்யப்பட்ட பள்ளிகள், கல்லூரிகளில் "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பின் கீழ் கருத்தரங்குகள் நடைபெற்று வருகிறது. அதன் அடிப்படையில் நெல்லை மாவட்டத்தில் "நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்கு ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது" என்ற தலைப்பின் கீழ் மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரி, பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரி,நெல்லை சாப்டர் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில்

கருத்தரங்கம் நடைபெற்றது. மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு பேசியதாவது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் சட்டமன்றத்தின் மூலம் சமூக முன்னேற்றத்திற்காக ஆற்றிய சாதனைகளில் மாணவர்களை ஈர்த்தது என்ற தலைப்பில் கருத்தரங்கு விழாவில் மாணவர்களாகிய உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

முந்தைய காலகட்டங்களில் குறிப்பிட்ட சமூகத்தினர் மட்டுமே கல்விக்குச் செல்ல முடியும் மற்ற சமூகத்தினர் கல்வி கற்கவோ அல்லது உயர் பதவிகளுக்கு செல்ல முடியாத சூழ்நிலை இருந்தது. அப்போது பிரிட்டனில் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கையில் கல்வி எல்லோருக்கும் ஒன்று.ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டுமல்ல, அனைவரும் கல்வி வழங்க வேண்டும். என்று சொன்னதன் அடிப்படையில் தான் 1835 மெக்காலே பிரபு கல்வி குழு அமைத்ததன் அடிப்படையில் அனைவரும் கல்வி கற்கும் வகையில் தாய்மொழி வழி கல்வி கொண்டு வரப்பட்டது.

1835 நமது தமிழ்நாட்டில் தமிழ்மொழியும், தெலுங்கானாவில் தெலுங்கு மொழியும்,கேரளாவில் மலையாளம்,கனடாவில் கன்னட மொழி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மொழிகள் சார்ந்த பகுதிகளாக இருந்தது. எனவே அனைவரும் கல்வி கற்க வேண்டுமென்றால் முதலில் அவர்களின் தாய் மொழிக்கு முதலில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எனவே நமது மாநிலத்தில் முதலில் தமிழ், இரண்டாவது ஆங்கிலம், மூன்றாவது கணிதம்,நான்காவது அறிவியல்,ஐந்தாவது வரலாறு என இப்படி தான் கல்வி கற்க வேண்டும் என சட்டம் கொண்டுவரப்பட்டது.மேலும் அனைவராலும் நிலம் வாங்க முடியாது. 1795 இல் தான் எல்லோருக்கும் நிலம் வாங்கலாம் என சட்டம் கொண்டு வரப்பட்டது. தந்தை பெரியார் பெண் கல்வி,சமூக உரிமை வேண்டும் என போராடினார்.

பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பெண்களும் கல்வி கற்க வேண்டும் என ஊக்குவிக்கும் வகையில் மூவலூர் ராமாமிர்தம் அவர்களின் நினைவாக ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டம், கைம் பெண்களின் மறுமணத்தை ஊக்குவிக்கும் விதமாக கைப்பெண்ணின் மறுமண நிதிஉதவிதிட்டம்,சொத்தில் பெண்களுக்கு சம உரிமை சட்டம்,பெண்களுக்கான இலவச பட்டப் படிப்பிற்கான திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு மகத்தான திட்டங்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்டது.

தற்போது இந்தியாவில் 26 சதவீதம் பெண்கள் பட்டப்படிப்பு படித்து வருகின்றனர்.ஆனால் தமிழ்நாட்டில் பட்டப்படிப்பு படித்து வரும் பெண்கள் 72 சதவீதம் ஆகும். இதற்கு காரணம் நமது முன்னாள் தலைவர்களான பேரறிஞர் அண்ணா அவர்கள்,பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பணிகள் தான் காரணமாகும்.

சமீபத்தில் பீகாரில் மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டது அதன்படி உயர் ஜாதியினர் 10.3 சதவீதமும் அரபு மொழி பேசும் முஸ்லீம் 5 சதவீதம் உள்ளனர். இவர்கள் அனைவரும் பட்டம் பெற்றுள்ளனர்.மிகவும் பிற்படுத்தப்பட்ட உறுப்பினர் 69 சதவீதம் பேரில் 2.3 சதவீதம் பேர் மட்டுமே பட்டம் பெற்றுள்ளதாக புள்ளி விவரம் கூறுகிறது.ஆனால் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் உயர்கல்வி படித்தோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது இதற்கு காரணம் "திராவிட மாடல் ஆட்சி" தான்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார். முன்னதாக சட்டப் பேரவை முன்னாள் தலைவரும்,குழு உறுப்பினரும், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளருமான இரா. ஆவுடையப்பன் பேசியதாவது. பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் 1920 ல் செங்கல்பட்டில் நடந்த கூட்டத்தில் பெண் கல்வி, பெண்களுக்கு சம உரிமை வேண்டும் என தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

ஆனால் தந்தை பெரியாரின் கனவை 60 ஆண்டுகளுக்கு பின் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இதனை நிறைவேற்றினார். பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் 8 படித்தால் 5,000-ம்,10 படித்தால் 10,000-ம்,12 படித்தால் 20,000 என திருமண உதவித் தொகைக் கொடுத்து ஊக்கப்படுத்தியவர் கலைஞர் அவர்கள். பெண்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டும் என உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவீதம் பெண்கள் பொறுப்பில் உள்ளார்கள். கலைஞர் அவர்கள் ஏழ்மையான குடும்பத்திலிருந்து உழைத்து முன்னேறியவர். அது போன்று மாணவ செல்வங்கள் தங்கள் ஆற்றலை வளர்த்து முன்னேறி உயர் நிலைக்கு வர வேண்டும்.

இவ்வாறு இரா.ஆவுடையப்பன் பேசினார்.

இதனைத் தொடர்ந்து நிகழ்வில் சட்டமன்ற நாயகர் கலைஞர் விழா குழுக் கருத்தரங்கில் உரையாற்றிய மாணவிகள் 5 பேருக்கு பரிசு தொகையாக ரூபாய் 10,000 மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

மேலும் மாவட்டத்தில் நடைபெற்ற உள்ள புத்தகத் திருவிழாவில் கருத்தரங்கில் பங்கு பெற்ற 5 மாணவிகளுக்கு புத்தகம் வாங்குவதற்காக ரூபாய் 1000-ம் மதிப்புள்ள புத்தகக் கூப்பன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை கூடுதல் செயலாளர் நாகரத்தினம், இணைச் செயலாளர் தேன்மொழி, துணை செயலாளர் அலமேலு,அன்னை ஹாஜிரா கல்லூரியின் தலைவர் செய்யது அகமது,செயலாளர் குதா முகமது, பொருளாளர் ஜாபர்சாதிக் முதல்வர் ரஜப் பாத்திமா, மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், நெல்லை கிழக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் முத்தமிழ் ராஜபாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக்குழு உறுப்பினர் வேலங்குளம் கண்ணன்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப்பெல்சி, ராஜன்,மேலப்பாளையம் பகுதிச் செயலாளர் துபை சாகுல் உள்பட பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு நிகழ்வு சட்டப்பேரவை முன்னாள் தலைவர்,குழு உறுப்பினர் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளருமான இரா.ஆவுடையப்பன் தலைமையில் சட்டப்பேரவை முன்னாள் செயலாளர் மா.செல்வராஜ், கல்லூரி செயலாளர் ஜி.ஜெயச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ஆண்ட்ரூஸ் வரவேற்புரையாற்றினார். நடைபெற்ற போட்டியில் 4 மாணவிகள் 1மாணவர் உள்பட 5 பேருக்கு பரிசுத் தொகை, சான்றிதழ் வழங்கப்பட்டது. அதன் பின்னர் நெல்லை டவுண் சாப்டர் மேல்நிலைப்பள்ளியில்

கருத்தரங்கம் நிகழ்வு நடைபெற்றது.

தென்காசி வடக்கு - தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தென்காசி.ஜன.13-

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் இன்று (13.01.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில் வைத்து மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் நடைபெறுகிறது என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது.

தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி முன்னெடுப்பில் தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில் மாவட்ட அளவிலான சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு கூட்டம் இன்று 13ஆம் தேதி - சனிக்கிழமை காலை 10 மணி அளவில் எனது தலைமையில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி வகுப்பில் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி,

தொண்டர் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி,மருத்துவர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளரணி, சுற்றுச்சூழல் அணி, அயலாக அணி உள்ளிட்ட தலைமைக் கழக அறிவித்த மேற்கண்ட அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.